**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 32/2020**

**Deposition of Witness for : PW 1**

| | | |
|---|---|---|
| **Name** | : | திருமதி. ரேணுகா |
| **Father Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 24-11-2022.**

முதல் விசாரணை -

நான் தற்போது செங்கம் சமூக பாதுகாப்பு திட்ட அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 24.7.2018ல் செங்கம் வட்டாட்சியராக பணியில் இருந்த போது அன்றைய தினம் இரவு 12 மணியளவில் மணல் கடத்தப்போவதாக கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் நானும், என் டிரைவர் தசரதம், கிராம உதவியாளர் பச்சையப்பன் மற்றும் கோபிநாத் மற்றும் அலுவலக உதவியாளர் பக்கிரிசாமி ஆகியோர் காஞ்சி ரோடில் தணிக்கையில் ஈடுபட்டுக்கொண்டு இருந்த போது சுமார் 1 மணியளவில் காகா ஆஸ்ரமம் அருகில் வாகனத்தனிக்கையில் ஈடுபட்டுக் கொண்டு இருந்த போது காஞ்சியில் இருந்து திருவண்ணாமலை நோக்கி வந்த டிப்பர் லாரி பதிவு எண் டி.என் 67 டி 0140 என்ற லாரியை தடுத்து நிறுத்தியபோது அந்த வாகனத்தின் டிரைவர் விஜயகாந்தை விசாரணை செய்தோம், அப்போது லாரியை சோதனை செய்தபோது 2 யூனிட் மணல் இருந்தது. டிரைவர் விஜயகாந்திடம் பர்மிட் மற்றும் ரசீது உள்ளதா என்று கேட்டதற்கு அவர் ரசீது எதுவும் இல்லை என்று கூறினார். மேலும் வாகனத்தில் ஓனர் சிலம்பரசனும், கிளினர் செல்வராஜும் இருந்தார்கள். ஆஜர் எதிரிகள் தான் அவர்கள். லாரி டிரைவர் விஜயகாந்த் எங்கள் கோபமாக திட்டினார். ஓனர் சிலம்பரசனும், கிளினர் செல்வராஜும் லாரியை ஏற்றி கொல்லுங்கள் என்று கூறினார்கள். மேலும் என்னை தகாத வார்த்தைகளால் திட்டியும் எங்கள் மீது வண்டியை ஏற்ற லாரி டிரைவர் ஆக்ஸிலேட்டரை அழுத்தினார். நானும் எங்கள் டிரைவர் தசரதனும் ஒதுங்கி விட்டோம். நாங்கள் அவ்வாறு ஒதுங்கவில்லை என்றால் எங்கள் மீது லாரியை ஏற்றி இருப்பார்கள். நாங்கள் அந்த லாரியை பின்தொடர்ந்து சென்றோம். கலர்கொட்டாய் கிராமத்தில் லாரியின் சக்கரம் பள்ளத்தில் மாட்டி சிக்கிக்கொண்டது. நாங்கள் பின்தொடர்ந்து வருவதை பார்த்து விட்டு

அவர்கள் மூவரும் ஓடிவிட்டார்கள். இது குறித்து காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகார் அ.சா.ஆ.1. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள், நடந்ததை கூறினேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> -

நான் பி.எஸ்சி படித்துள்ளேன். புகாரில் தனிக்கையின் போது என்னுடன் டிரைவர் தசரதன், கிராம உதவியாளர் பச்சையப்பன் மற்றும் கோபிநாத் மற்றும் அலுவலக உதவியாளர் பக்கிரிசாமி உடன் வந்ததாக நான் குறிப்பிட்டு சொல்லவில்லை. இரவு 12 மணிக்கு மணல் கடத்தப் போவதாக தகவல் கிடைத்த போது நான் எனது அரசு குடியிருப்பு செங்கத்தில் இருந்தேன். தணிக்கைக்கு நான் எந்த வாகனத்தில் சென்றேன் என்று புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை. காஞ்சி ரோடில் காகா ஆஸ்ரமம் அருகில் தணிக்கையில் இருந்ததாக நான் புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை. நான் தணிக்கையில் இருந்த போது வாகனத்தை நிறுத்த சொல்லி சைகை செய்தபோது லாரியை நிறுத்தினார்கள். நான் கேட்ட தகவலுக்கு அவர்கள் பதில் கொடுத்தார்கள். அன்றைய தினம் என் பணியை நான் சரியாக செய்து முடித்தேன். சம்பவம் நடந்ததாக சொல்லும் தேதிக்கு முன்னர் எதிரிகளை தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லும் இடமானது இருட்டு பகுதி என்று சொன்னால் சரியல்ல. வெளிச்சம் காணப்பட்டது. என்னுடைய புகாரில் டிப்பர் லாரியை விஜயகாந்த் ஓட்டி வந்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் எதிரிகள் பயன்படுத்திய லாரியை பின்தொடர்ந்து வந்தபோது அது குறித்து உடனடியாக காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்து விட்டேன். சம்பவத்தன்று இரவி 1.30 மணியளவில் போலீசாரும் அங்கு வந்து விட்டனர். அப்போது செல்வராஜை போலீசார் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள் என்றால் எனக்கு தெரியாது. ஆனால் காவல் நிலையத்திற்கு சென்றபோது செல்வராஜ் அங்கு இருந்தார். சம்பவ தேதியில் லாரியில் மணலை அவர்கள் கடத்தவில்லை என்றும் M-sand யை தான் அவர் எடுத்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்தன்று நாங்கள் கையூட்டு கேட்டதால் அவர்கள் தர மறுத்ததால் என்னுடன் இருந்தவர்கள் செல்வராஜை அடித்ததால் அவருடைய இரண்டு பல் விழுந்து விட்டது என்றும், அது குறித்து அவர் எங்கள் மீது புகார் கொடுத்திருந்தார் என்று சொன்னால் சரியல்ல. நான் இரவு 2.30 மணியளவில் புகார் கொடுத்து விட்டேன். அப்போழுதே லாரியை போலீசார் காவல் நிலையத்திற்கு கொண்டு வந்து விட்டார்கள் என்றால் சரியல்ல. மறுநாள் காலை எடுத்து வந்திருந்தார்கள். இச்சம்பவத்திற்கு பிறகு நான் அரசு பணியில் இருந்தபோது கையூட்டு பெற்றதாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். எதிரிகள் எங்களை லாரி

ஏற்றி கொன்று விடு என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சிலம்பரசனும், செல்வராஜும் ஏற்றிக் கொல்லுங்கடா என்ற விவரத்தை என்னுடைய புகாரிலும், வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் வட்டாட்சியர் என்பதால் வாகனங்களை மறித்து தணிக்கை என்ற பெயரில் என்னுடைய உறவினர்களுடன் சென்று கையூட்டு பெற்று வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. அதன் காரணமாக தான் என்னுடைய புகாரில் யார் யார் என்னுடன் தணிக்கையின் போது வந்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் செல்வராஜை அடித்து காயப்படுத்திய வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக நடக்காத ஒன்றை நடந்ததாக பொய்யாக ஒரு புகாரை கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 24.7.2018 போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் அதன் பிறகு என்னை விசாரிக்கவில்லை. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/- ரேணுகா

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.